# இலங்கையைச் சிறப்பாகக் கொண்ட கிராமிய சமுதாய விருத்திக்கான நோக்குகள்

இ. மதனாகரன்

கிராமியப் பகுதிகள் என்று கருதப்படுபவை நகரப்பகுதிகளிலிருந்து வேறுபட்டனவாகவும், விவசாய நடவடிக்கைகளாற் சூழப்பட்ட பரவலான குடியிருப்புக்களைக் கொண்டனவாகவுமே இன்று பொதுவாகக் காணப்படுகின்றன. எனினும், கிராமியப் பகுதிகளிடையே இன்று கிராமிய நகரங்கள் வளர்ச்சியடைந்து வருகின்றன. இதனால் கிராமிய சமுதாயத்தைத் தனியானதொரு நிலையில் வைத்து அதன் விருத்திக்கான முயற்சிகளை மேற்கொள்ளல் தவறானதாகும். அதாவது கிராமியப் பகுதிகள் நகரப்பகுதிகளிலும் நகரப்பகுதிகள் கிராமியப் பகுதிகளிலும் இன்று தங்கியுள்ளன.

கிராமிய சமுதாய விருத்தி என்னும் கோட்பாட்டில் கிராமிய சமுதாயத்தினரின் நலனைப் பேணலே அடிப்படையாகக் கொள்ளப்பட வேண்டியதாகும். எனினும், கிராமியப் பகுதிகளில் சுகாதார வசதிகளையும், ஏனைய வசதிகளையும் வழங்குவதை மட்டும் இது கருதாது. இப் பாகங்களில் கிடைக்கக்கூடிய முழுமையான பௌதிக, மனித வளங்களை உச்சநிலைப் பயன்பாட்டில் ஈடுபடுத்தும் நோக்குடையதொன்றாக அமைதல் வேண்டும்.

கிராமிய சமுதாயத்தில் பயிர்ச்செய்கை மிக முக்கிய இடத்தைப் பெற்றிருப்பதனால் விவசாய விருத்தியும் கிராமிய விருத்தியும் ஒன்றென சில சந்தர்ப்பங்களில் எண்ணப்படுவதுண்டு. அதாவது கிராமியப் பகுதிகளில் பாரிய விவசாய நடவடிக்கைகளிலும் குறிப்பாக ஏற்றுமதிக்கான பயிர்ச் செய்கையிலும் விருத்தி ஏற்படும் அதே நேரத்தில் கிராமிய மக்களின் வாழ்க்கை நிலையில் வீழ்ச்சி ஏற்படுவதையும் வருமான ஏற்றத்தாழ்வுகளில் வேறுபாடு அதிகரிப்பதையும் காணக்கூடியதாயிருக்கின்றது. இதனால் கிராமியப் பகுதிகளில் முன்நிற்கும் சில துறைகளை மட்டும் விருத்தி செய்வதன் மூலம் கிராமிய விருத்தியினை ஏற்படுத்தமுடியாது. ஏனெனில், இத்தகைய துறைகளில் குறிப்பாகப் பயிர்ச்செய்கைத்துறை இயற்கையில் பெருமளவுக்குத் தங்கியிருந்தாலும், இதனுடன் தொடர்பான பொருளாதார நடைமுறைகளும் ஏற்றத்தாழ்வுகளுக்கு உட்படுதலும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இவற்றின் உற்பத்தி அளவு ஏற்றத்தாழ்வுகளுக்கு உட்படுவதுடன், மனிதக் கட்டுப்பாட்டுக்கும் அப்பாற்பட்டது. எனவே, கிராமிய விவசாயி உற்பத்தியினளவைக் கூட்டிக் குறைக்கக்கூடிய பரும்படியாக்கக் கைத்தொழிலாளனைப் போலன்றி, வேறு

பட்ட நிலையில் இருக்கின்றான். இவ்வாறு வேறுபல கிராமியத் தொழில் துறைகளும் வானிலை - காலநிலைத் தோற்றப்பாடுகளில் பெருமளவுக்குத் தங்கியுள்ளன.

மேற்கூறியவற்றைத் தவிர வேறுபல காரணிகளும் கிராமியத் தொழில் துறைகளைத் தனித் தொகுதிகளாக்குகின்றன. ஏனைய தொழில்துறைகளோடு பார்க்கும் பொழுது, பயிர்ச் செய்கைத் தொழில், 'குறைந்து செல்லும் பயன் விதி'யினால் பெருமளவுக்கு ஆட்கொள்ளப்பட்டுள்ளது. உதாரணமாக, கூடியளவுக்குச் செயற்கை வளமாக்கிகளைப் பயன்படுத்துதல் மூலம் விகித அளவில் உற்பத்தியினை அதிகரிக்கமுடியாது. அத்துடன் பயிர்ச் செய்கைப் பொருட்களுக்கான கேள்வியின் நெகிழ்ச்சித் தன்மையின்மையும் அதன் உற்பத்தியை மட்டுப்படுத்துவதுடன், தனிப்பட்ட விவசாயி ஒருவன் விலைகளைக் கட்டுப்படுத்துவதிலும் தனது செல்வாக்கைக் காட்ட முடியாதிருக்கின்றது. இத்தகைய காரணிகளினால் முன்னேற்றமடைந்த கிராமிய சமுதாயத்தில் கூட கிராமியத் தொழில் நடவடிக்கைகள் ஒரு தொழில் என்ற முறையிலல்லாமல் வாழ்க்கைக்கான வழியாகவே காணப்படுகின்றது.

மக்கள் தனியானவர்களாக இயங்கும் அதே நேரத்தில், சமூக வாழ்க்கையிலும் பொருளாதார வாழ்க்கையிலும் ஏனையவற்றிலும் அவர்கள் மற்றவர்களுடன் ஒன்றிணைந்தே செயற்படுகின்றார்கள். இதனால் மனிதனை அவன் தனியானவன் என்று கருதி அவனது முன்னேற்றத்திற்கான முயற்சிகளை மேற்கொள்ள முடியாது. இது போன்றுதான் ஒரு இடத்தின், பிரதேசத்தின் விருத்தியுமாகும். இங்குதான் ஒன்றிணைந்த கிராமிய சமுதாய விருத்திக்கான திட்டமிடுதல் என்னும் கோட்பாடு முக்கியத்துவத்தினைப் பெறுகின்றது. ஒன்றிணைந்த கிராமிய சமுதாய விருத்திக்கான திட்டமிடல் என்பது கிராமிய சமுதாய விருத்திக்கான நோக்கங்களில் இடம்பெறும் எல்லா அம்சங்களையும் உள்ளடக்கி, எல்லாவற்றினதும் ஒத்த விருத்திக்குத் திட்டமிடலாகும். அதாவது கிராமிய சமுதாயத்தில் விருத்தி ஏற்படும் பொழுது வளர்ச்சியும் ஏற்படக்கூடியதாக, உற்பத்திச் செயன்முறைகளிலும் அடிப்படை மாற்றங்கள் ஏற்படுதல் வேண்டும். இத்தகைய அமைப்பு மாற்றங்கள் தொடர்ச்சியாக தேசிய பிரதேச விருத்திக்கான இலக்குகளுக்கும், நோக்கங்களுக்குமேற்ப ஏற்பட வேண்டும். உற்பத்திச் செயன்முறைகளில் ஈடுபடுபவர்களும், எதை, எந்தளவில், எங்கு, யாருக்காக உற்பத்தி செய்கின்றார்களென்றும், இதனால் யார் எந்தளவுக்கு நன்மையடைகின்றார்களென்றும் வெளிப்படையாகத் தென்படவேண்டும். எனவே கிராமிய சமுதாய விருத்தி எனும் பொழுது உற்பத்தி முறைகளிலும், உடமைகளிலும் மாற்றங்களை ஏற்படுத்துகின்ற வளர்ச்சியாகவும், உற்பத்தியும் இலாபமும் கூடிய அளவுக்கு சமமாகப் பங்கிடக்கூடிய ஒரு ஒழுங்கு முறை

யாகவும் மேலும் உற்பத்தியை அதிகரிக்கக் கூடிய அடிப்படைகளைப் பலப்படுத்துவதாகவும், சமூக-பொருளாதார நிலைமைகளுக்கேற்ப தொழில் நுட்ப விருத்தி ஏற்படுவதாகவும், மூலவள ஒதுக்கீட்டிலும், திட்டமிடலிலும் சிறந்த முறைகளைப் பயன்படுத்துவதாகவும், சிறந்த நிர்வாகத்திறனையுடைய ஒரு அமைப்பாகவும் இருத்தல் வேண்டும். இந்த அடிப்படையில் வளர்ச்சி என்பது இயந்திரசாதன செயல் முறைகள் மூலம், மனித நலன்களைக்கூட அர்ப்பணித்து ஏற்படுத்தக்கூடிய ஒன்ருகவும், விருத்தி என்பது பெருமளவுக்கு சமூக அடிப்படையில், நிறுவன மாற்றங்களுடன் ஏற்படும் பொருளாதார வளர்ச்சியாகவும் கருதப்படல் வேண்டும். அதாவது கிராமிய சமுதாய விருத்தி பல அம்சங்களைத் தன்னுள் அடக்கியிருப்பதுடன், பொருளாதாரத்தில் பெருமளவு முதலீட்டினைச் செலுத்துவதனுல் மட்டும் ஏற்படுத்தக் கூடிய ஒன்றன்று. இது சமூக அமைப்பு, பொருளாதார நிறுவனங்கள், அரசியலமைப்பு முறை, தொழில் நுட்பவியல் சாதனங்கள், எண்ணங்கள் போன்ற பலவற்றின் கூட்டுத் தோற்றப்பாடாகும்.

ஒரு கிராமத்தில் விருத்தியை ஏற்படுத்தும் பொழுது பிரதேச அல்லது பரப்பு ஒன்றினைவை மறக்கலாகாது ஒரு தொழில் முறைக்கு ஏனைய தொழில் முறைத் தொடர்புகள் இருப்பது போன்று ஒரு பிரதேசத்திலும் ஒரு இடம் ஏனைய இடங்களுடன், தொடர்பு பட்டுள்ளது. இவ்விடங்களுக்கிடையே மக்கட்தொடர்புகளும், பொருள் தொடர்புகளும் செய்தித் தொடர்புகளும் ஏற்பட்டுக் கொண்டேயிருக்கின்றன. எனவே ஒரு பிரதேசத்தின் விருத்திபற்றிக் கருதுகையில் ஒரு இடம் விருத்தியடைய இன்னென்று விருத்தியடையாத வகையிலல்லாது ஒவ்வொரு இடமும் தானே விருத்தியடையத் தக்க வகையில் இடங்கள், பிரதேசங்களின் ஒன்றிணைவான திட்டமொன்றினை ஏற்படுத்த வேண்டும். ஒரு இடத்தை அல்லது பிரதேசத்தை திட்டத்தில் புறக்கணிக்கும் பொழுது அப்பகுதி மக்களையே புறக்கணித்தவர்களாவோம்.

விருத்தியடைந்துவரும் எமது நாடு போன்ற நாடுகளில் மக்களிடையே பொருளாதார சமூக வாழ்க்கையில் வேறுபாடுகள் அதிகளவில் காணப்படுகின்றன. இத்தகைய சமனற்ற தன்மை காரணமாகவே இந் நாடுகளில் வறிய மக்கள் அதிகளவிற் காணப்படுகின்றனர். எனவே ஒன்றிணைந்த திட்டமிடுதலின் மூலம் இத்தகைய வறுமையான மக்களின் வாழ்க்கை நிலையையும் ஏனையவர்களின் நிலைக்கு உயர்த்துவதற்கு, இவர்களையும் தேசிய பிரதேச விருத்தியில் சம பங்காளிகளாக மாற்றும் பொழுது கிராமிய சமுதாய விருத்தி இலகுவாக ஏற்பட வாய்ப்புகளேற்படும்.

இலங்கை உட்பட பல விருத்தியடைந்துவரும் நாடுகளின் பொருளாதாரம் இருமைத்தன்மையுடையதாகக் காணப்படுகின்றது.

அதாவது பாரம்பரியமான துறைகள் ஒரு புறமாகவும், நவீன துறைகள் இன்னொரு புறமுமாக அமைந்து காணப்படுகின்றன. இந் நாட்டின் பாரம்பரியமான துறைகளில் ஒருவர் இலகுவாக பிரவேசிக்கக் கூடியதாகவும், இது உள்நாட்டில் கிடைக்கக்கூடிய வளங்களை அடிப்படையாகக் கொண்டதாகவும், நிறுவனங்கள் குடும்ப அடிப்படையில் சொந்தமுடைமையையுடையனவாகவும், தொழிலாளர் செறிவானதாகவும், திருத்தியமைக்கப்பட்ட தொழில்நுட்பவியலையுடையதாகவும், பாரம்பரிய பாடசாலைக் கல்விக்கு வெளியே பெறப்பட்ட பயிற்சிமுறையையுடையதாகவும், ஒழுங்குபடுத்தப்படாத போட்டியையுடைய சந்தைகளையும் கொண்டுள்ளதாகக் காணப்படுகின்றது. கிராமியப் பகுதிகளில் பெருந்தோட்டங்களிடையேயும், பெரியளவிலான வர்த்தகப் பண்ணைகளிடையேயும், சில நவீன கிராமிய சிறுகைத்தொழில்களிடையேயும் பெருமளவில் காணப்படுகின்ற சிறிய விவசாயிகளின் மூலமும், நிலமற்ற தொழிலாளர் மூலமும் கைவினைஞர்கள் மூலமும் இதனைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இவ்விரு தொகுதியினருக்குமிடையே வருமானத்திலும், சமூக நிலைகளுக்குமிடையே பெருமளவு இடைவெளி காணப்படுவதுடன். இது மேலும் அதிகரித்த வண்ணம் இருக்கின்றது.

இவ்விருமைத் தன்மை காரணமாக, இந் நாட்டின் கொள்கைகளை வகுப்பவர்கள் பல பிரச்சனைகளை எதிர்நோக்கவேண்டியுள்ளது. அதாவது தேசிய வளங்களையும், அரசாங்க உதவிகளையும் நவீன துறைகளுக்கும், பெருந்தோட்டங்களுக்கும், முன்னேற்றமடைந்த விவசாயத்துறைகளுக்கும் கொள்கைகளை வகுப்பவர்கள் செலுத்த முயற்சித்தால் விரைவான வளர்ச்சியையும், மொத்த தேசிய உற்பத்தியையும், உயர்ந்த ஏற்றுமதி மூலமான வருமானத்தையும் பெறலாமென எண்ணினுல், ஏற்கனவே காணப்படுகின்ற செல்வந்தர்களுக்கும் வறுமையானவர்களுக்குமிடையிலான வருமான ஏற்றத்தாழ்வு மேலும் அதிகரிக்குமென்பதில் ஐயமில்லை. உதாரணமாக பயிர்ச் செய்கையில் ஏற்படுத்தப்படுகின்ற தொழில்நுட்ப மாற்றங்கள், குறிப்பாக பசுமைப் புரட்சி என்று கூறப்படுகின்ற செயன்முறைகளினுல் செல்வந்த விவசாயிகளுக்கே அதிகளவு நன்மைகளைக் கொடுப்பதுடன் பெருந்தொகையான ஏழை விவசாயிகளின் நிலையினை மேலும் மோசமான நிலைக்குத் தள்ளியுள்ளது. அரசாங்க உதவியின் மூலமும் முன்னேற்றமடையும் துறைகளின் மூலமும் ஏனைய துறைகள் நன்மையடையும் என்பது செயல்முறையில் சாத்தியமானதல்ல. இது சம்பந்தமாக மெச்சிக்கோ, ஈரான், பாகிஸ்தான் போன்ற நாடுகளில் பெறப்பட்ட அனுபவங்கள் இதனை உறுதிப்படுத்தியுள்ளன. எனவே இதற்கு மாருக முன்னேற்றமடைந்த துறைகளுக்கான விருத்திக்குத் தடையை ஏற்படுத்தாத வகையில் பெருந்தொகையான ஏழை விவசாயிகளின் வாழ்க்கைக்கான பொருளாதாரத்துறையில் கூடிய கவனம் செலுத்துதல் விரும்பத்தக்கதாகும் இதன்மூலம் விருத்தியடைந்து

வருகின்ற நாடுகளில் பிரதான வளமாகக் காணப்படுகின்ற தொழிலாளரை முழுமையாகப் பயன்படுத்தக் கூடியதாயிருப்பதுடன், வருமானமும் சிறந்தமுறையில் பங்கிடப்படுவதற்கு ஏதுவாகும். இதன் காரணமாக மக்களின் கொள்வனவு சக்தி அதிகரிப்பதுடன், சந்தையின் அளவும் பெருக்கமடைவதனுல் உள்ளூர்க் கைத்தொழில்களின் விருத்தியும் ஏற்பட ஏதுவாகும். இத்தகைய கொள்கை, பெருமளவு மக்கள் இதனுள் அடங்குவதனுலும், பெரியளவான நிறுவன மாற்றங்களை ஏற்படுத்த வேண்டியிருப்பதனுலும், இவை நீடிய காலத்தை எடுக்கக் கூடியனவாகவிருப்பதனுலும், மேற்கொள்ளப்படுவதற்குக் கஷ்டமானதாகும். எனினும் இதுவே ஒரேயொரு திருப்திகரமான முறையாகத் தோன்றுகின்றது.

கிராமிய விருத்தி சம்பந்தமாக எடுக்கக்கூடிய இன்னுெரு நோக்கு, துறைசார்பான விருத்தியா அல்லது ஒன்றிணைந்த திறமுறையா என்பதாகும். பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளையும் ஒரே நேரத்தில் ஒன்றிணைவாக விருத்திசெய்தல் பல அனுகூலங்களைக் கொண்டிருப்பதற்குக் காரணம், ஒரு துறையின் விருத்தி பல சந்தர்ப்பங்களில் இன்னுெரு துறையில் தங்கியிருப்பதாகும். விருத்தி என்பது பல தன்மைகளைக்கொண்ட ஒரு தோற்றப்பாடாகும் விருத்தி ஏற்படும் பொழுது அச்செயன்முறையில் மனிதனுடைய வாழ்க்கை முறையும் தொழில் முறைகளும் மாற்றங்களுக்குட்பட வேண்டும். அதாவது ஒன்றில் அல்லது சில தெரிவு செய்யப்பட்ட துறைகளில் நாம் மாற்றங்களை ஏற்படுத்தினுல் அதன் மூலம் ஏற்படும் எமது முன்னேற்றம் மெதுவாகவே ஏற்படும். அதாவது ஏனைய துறைகள் வளர்ச்சியற்ற நிலையில் காணப்படும்பொழுது முன்னேற்றம் அல்லது விருத்தி மெதுவாகவே காணப்படும்.

பொருளாதாரத்தின் ஒவ்வொரு தொழில் முறையும் தனது முன்னுேக்கிய, பின்னுேக்கிய தொடர்புகளைக் கொண்டுள்ளது. இதன் விருத்தி பெருமளவு ஏனைய தொழிற்துறை விருத்திகளிலும் தங்கியுள்ளது. இதன் காரணமாகவே 'ஒரு நாடு வறுமையாயிருப்பதற்குக் காரணம் அதன் வறுமை நிலையே' என்று கூறப்படுகின்றது. அதாவது நாம் ஒரு நாட்டில் அல்லது பிரதேசத்தில் வாழும் மக்களின் வருமான நிலையை உயர்த்த வேண்டுமாயின் அவர்களது உற்பத்தித் திறனை அதிகரிக்கவேண்டும். உற்பத்தித்திறனும் அளவும் அதிகரிப்பதற்கு அவர்களுக்குக் கல்வியும், பயிற்சியும் அளிக்கப்பட வேண்டும். இதற்கு கல்வி போதிப்பவர்களும், பயிற்சியளிப்பவர்களும், பயிற்சியளிக்கும் வசதிகளும் இருப்பதுடன் பயிற்சியாளர்களைப் பயிற்றக்கூடிய வசதிகளும் இருத்தல் வேண்டும். இதேபோன்று உயர்ந்தளவான உற்பத்தியை ஏற்படுத்துவதற்கு சிறந்த சாதன வசதிகளும், கருவிகளும் கூடியளவான மூலதனமிடுதலும், ஏனைய

பலவகையான தொழில்முறைகளை விருத்தி செய்தலும் அவசிய மாகும்.

மனித வாழ்க்கையே, பொது நோக்கில் ஒன்றிணைந்த ஒன்றாகக் காணப்படுகின்றது. மனிதன் தனியானவனுக, சமூகத்திலும், பொரு ளாதார முறைமையிலும், ஏனைய அம்சங்களிலும் அங்கம் பெறுகின்றன். ஆகவே மனிதனுடைய விருத்தி என்பது இவை எல்லாவற்றையும் உள்ளடக்கிய விருத்தியாகும். இவற்றில் ஒன்றிணையாத ஒருவகை நாம் மனிதனை முன்னேற்றமடையச்செய்ய முடியாது. இதே போன்றுதான் ஒரு பிரதேசத்தின் விருத்தியும் அமைகின்றது. அகவே ஒன்றிணைந்த விருத்தியென்பது, விருத்தியை மையமாகக்கொண்ட எல்லா அம்சங்களையும் ஒரே நேரத்தில் விருத்தி செய்வதென்பதாகும்.

அதற்காக எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் செய்யாவிட்டால் ஒன்றையும் செய்யமுடியாதென்று அர்த்தமாகாது. விருத்தியை ஏற் படுத்தக் காரணிகளுள் சில முக்கியமானவையாகவும், ஏனையவற் றில் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடியனவாகவுமிருக்கின்றன அத் துடன் சில இயல்புகளை ஒரு குறித்த நிலைக்கு விருத்தி செய்தாற்றுன் அல்லது உயர்த்தப்பட்டாற்றுன் ஏனைய அம்சங்களை விருத்திசெய்ய முடியும். எனவே இவற்றுள் நாம் முக்கியமானவற்றைத் தெரிவு முறை யில் நோக்கி எவற்றை விருத்திசெய்ய வேண்டும், எப்பொழுது விருத்திசெய்ய வேண்டும், எந்தளவுக்கு விருத்திசெய்ய வேண்டும், இவை ஏனைய செயற்பாடுகளுடன் எத்தகைய தொடர்புகளைக் கொண் டுள்ளன என்பதை நிர்ணயிக்கவேண்டும். இதுவே துறையும் - கால மும் சார்ந்த ஒருங்கிணைவாகும். (Sectoral - Cum - Temporal Integration)

ஒன்றிணைவின் இன்னெரு அம்சம் இடம் சார்ந்த ஒருங்கிணை வாகும். (Spatial Integration) ஒவ்வொரு தொழில் முறைகளுக்கு மிடையே எவ்வாறு தொடர்புகள் காணப்படுகின்றனவோ, அதே போன்று ஒரு பிரதேசத்தில் பல்வேறு இடங்களுக்கிடையேயும் ஒருங் கிணைவு காணப்படுகின்றது. இவ்விடங்களுக்கிடையே மக்களும், பொருள்களும், அங்குமிங்குமாக செல்வதைக் காணலாம். சில குறித்த இடங்களில் ஏனைய இடங்களிலும் கூடியளவாக மூலதன மிடுதல் மூலம் அல்லது சில தொழில்களை நிறுவுதல் மூலம் இத்தகைய அசைவுகளிடையே நாம் மாற்றங்களை ஏற்படுத்தலாம்.

எனவே, இடங்களின் ஒருங்கிணைவையும் ஏற்படுத்தக்கூடிய வகையிலும், ஒவ்வொரு பகுதியும் இன்னெரு பகுதியை அல்லது பலவீனமான பகுதியைச் சுரண்டாத வகையிலும் பரப்பு ஒன்றி ணைவை ஏற்படுத்தக்கூடிய திட்டங்களைச் செயற்படுத்தல் அவசிய மானதாகும். அதாவது இங்கு ஓர்பகுதி கைவிடப்படுமானல், அப்

பகுதி மக்களையே கைவிடப்பட்டதாயிருக்குமாகையினால் இதில் நன்கு கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

ஒன்றிணைந்த விருத்தியின் இன்னொரு அம்சம் தனிப்பட்ட மக்களுடனும், மக்கள் கூட்டங்களுடனும் உள்ள தொடர்பாகும். அதாவது இலங்கை போன்ற நாடுகளில் சில மக்கள், ஏனையோரிலும் பார்க்க பொருளாதார அடிப்படையிலும், சமூக அடிப்படையிலும் மிக முன்னேற்றமடைந்தவர்களாகக் காணப்படுகின்றனர். நாட்டில் ஏற்படுகின்ற எத்தகைய விருத்தி நடவடிக்கைகளிலும் பெரும்பான்மையாகக் காணப்படுகின்ற வறிய மக்களிலும் பார்க்க இவர்களே கூடிய நன்மையையடையக் கூடிய நிலையிலும் காணப்படுகின்றனர். எனவே இங்கு ஒருங்கிணைந்த விருத்தி என்று கருதும்பொழுது குடித்தொகையில் இத்தகைய பெரும்பான்மையோராகக் காணப்படுகின்ற வறிய மக்கள் தொகுதியினரிடையேயும் விருத்தியை ஏற்படுத்தி, பிரதேச, தேசிய விருத்தியில் இவர்களையும் வசதிபடைத்த மக்களுடன் சம பங்காளிகளாக மாற்றுவதாகும்.

ஒருங்கிணைவின் இறுதியான முக்கியமான அம்சமாவது வேறுபட்ட இலக்குகளையுடைய பொருளாதார, சமூக, சூழல் விருத்தியினை உள்ளடக்குவதாகும். விருத்திக்கான பொருளாதார நோக்குகள் சமூக, சூழல் நோக்குகளுடன் ஒத்துச் செல்வனவாக இருத்தல் வேண்டும். இவற்றின் ஒன்றிணைவு விருத்தியின் பல்வேறு படிமுறைகளில் வேறுபடக்கூடியதாயிருத்தலும். இத்தகைய ஒருங்கிணைவு சந்தையின் செயல்முறையாலோ அல்லது வருங்கால சந்ததியினரால் ஏற்படுத்தப்படக்கூடிய தொன்று என்றோ கைவிடப்படக் கூடாது

எனவே, இலங்கை போன்ற பெருமளவுக்கு கிராமிய மக்களைக் கொண்ட நாடுகளில் கிராமியப் பண்புகள் செறிந்த மக்களே பெருமளவுக்குக் காணப்படுவதனாலும், கிராமியப் பகுதிகளை விருத்தி செய்வதற்கு, பரந்தளவான விருத்தித் திட்டத்தில் மக்கள் வாழ்க்கையில் முக்கியத்துவம் பெறுகின்ற துறைகள் எல்லாவற்றுக்கும் முக்கியத்துவம் கொடுத்து, ஏனைய துறைகளையும் கைவிடாது விருத்தி திட்டங்கள் ஏற்படுத்தப்படுதல் வேண்டும். தொழில் முறைகளின் பல துறைகளுக்கிடையேயும், உபதுறைகளுக்கிடையேயும், பல பிரதேசங்களுக்கிடையேயும், இடங்களுக்கிடையேயும், மக்கள் குழுக்களுக்கிடையேயும், மாறுபட்ட சமூக, பொருளாதார, சூழல் இலக்குகளுக்கிடையேயும் ஒன்றிணைவை ஏற்படுத்தி விருத்தியை ஏற்படுத்துதல் வேண்டும்.

## References

1. **Abercrombie, K. C.** - Rural Employment, a primary objective *Ceres* (FAO, Rome) 1973.

2. **Anker, L. W;** - *Rural Development - Problems and strategies* ILO, Geneva 1969.

3. **David Turnham** - The Employment problem in less developed countries, a review of evidence *OECD Development Centre Studies 1971.*

4. **Louis Emmerij** - "Research priorities of the world employment programme" *International Labour Review*, May 1972.

5. **Paul Balroch** - *Urban Employment in developing countries* - The nature of the problem and proposals for its solutions ILO, Geneva 1973.

6. **Raanan Weitz** - *From Peasant to Farmer!* A revolutionery strategy for development New, Columbia University Press 1971.

7. **Spicer, Edward H.** (ed) - *Human problems in Technological change A Class Book* New York, Russell Sage Foundation 1952.

8. **Todaro Michael P.** - Economic Development in the Third World **Longman.** 1972